ஏறத்தாழ இதில் 5,000 பேர்கள் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அவர்கள் குறைந்துகொண்டே இருக்கிறார்கள். 500 பேர்கள் கூட இப்போது கிடையாது. ஆகவே குறிப்பிட்ட எண்ணிக்கை குறைந்துகொண்டு இருப்பதற்குக் காரணம் அந்தத் தொழிலைச் செய்வதிலே லாபம் இல்லை என்று அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலே மட்டுமல்லாமல், கடலில் வாழ்ந்து கொண்டிருக்கிற உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய அரசினுடைய முக்கியமான குறிக்கோளாக இருந்து வருகிறது. இயற்கையாகவே வளர்ந்து வருகின்ற, மீன்கள் பல்வேறு இன மீன்களை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கிற அந்த தீவுகள் போன்றவைகளை அழித்துவிடக்கூடாது என்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தினால், மீண்டும் அந்த சுண்ணாம்புக் கற்களை எடுப்பதற்கு அரசே நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை மாற்றியமைக்க வேண்டும் என்பது தான் அரசினுடைய கருத்தாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு மாற்றுத் தொழில்கள் தருவதற்கும், அவர்களுக்கு தேவையான அளவுக்குக் கடன் உதவிகளை வழங்குவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசின் மூலமாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஒத்துழைப்பை மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்குவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கை அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

முற்பகல் 10.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எ. ஏகாம்பர ரெட்டி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 1991-92-ஆம் ஆண்டிற்கான 5-வது மற்றும் 6-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அறிவிப்பு.

பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992(ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

[பேரவைத் தலைவர்] [1992 மார்ச் 31

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல்.

பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேஜையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறபோது எதிர்ப்பு இருந்து, அதன் பின்பு வாக்கெடுப்பில் நிறைவேறியது என்று சொல்கிற நேரத்தில் கரவொலி எழுப்பினால் போதும், எதிர்ப்பே இல்லாமல் நிறைவேறுவதற்கு வேண்டாம்.